**RBI /2004-05/213**

**CO.DT.No. 15.02.001/H 3484-3520/2004-05** **அக்டோபர் 7, 2004**

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
பாரத ஸ்டேட் வங்கியும் அதன் கூட்டாளி வங்கிகளுக்கும்
15 பொதுத்துறை வங்கிகளுக்கும்

அன்புடையீர்,

**பொதுத்துறை வங்கிகள் மூலமாக மூத்த குடிமக்களின் சேமிப்புத் திட்டசெயலாக்கம் 2004 (SCSS)**

ஆகஸ்ட் 2, 2004லிருந்து அரசாங்கம் தபால் அலுவலகங்கள் மூத்த குடிமக்களின் சேமிப்புத் திட்டத்தை (SCSS) இந்திய அரசு (GOI) அறிவிப்பு எண் G.S.R.490(E) ஆகஸ்ட் 2, 2004 அடிப்படையில் அறிமுகப்படுத்தியதை நீங்கள் அறிவீர்கள். பொது மக்களுக்கான வருங்கால சேமிப்புநிதி (PPF) திட்டத்தை (O.M.No.2-8/2004-NSII. 30th செப்டம்பர் 2004) செயலாக்கம் செய்யும் பொதுத்துறை வங்கிகள் மூலமாக் மேற்கண்ட திட்டத்தை செயலாக்கம் செய்ய இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் செயலாக்கத்தில் முகைமை வங்கிகளின் முழு ஈடுபாடு பி.பி.எஃப்.(PPF) 1968 திட்டத்தின் அடிப்படையில் அமையும். 2.8.2004 தேதியிட்ட அறிக்கை மற்றும் 30.9.2004 தேதியிட்ட அலுவலக நினைவுக்குறிப்பு ஆகியவற்றின் 10 பிரதிகளை உங்களுக்கு தகவல் அறிவிப்பு மற்றும் தேவையான நடவடிக்கைக்காகவும் அனுப்புகிறோம்.

2. 30.9.2004 தேதியிட்ட அலுவலக நினைவுக்குறிப்பிலிருந்து நுணுகிக்காண்பது என்னவென்றால், இந்திய அரசு திட்டத்தை செயலாக்க கீழ்க்கண்ட நடைமுறைகளை வரையறுத்துள்ளது.

A. தர அளவுபடுத்தப்பட்ட முகைமை அமைப்பின்கீழ் (SAS) பணியாற்றும் சிறுசேமிப்பு முகவர்கள் இத்திட்டத்தின்கீழ் வைப்பு திரட்ட தகுதியானவர்கள், அவர்களுக்கு தரகுத்தொகையாக வைப்புத் தொகையில் 0.5% (அரை சதவீதம்) கொடுக்கப்படவேண்டும். இந்திய அரசின் நிதிஅமைச்சகத்தின், பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் 10.2.2004 மற்றும் 20.5.2004 தேதிகளிட்ட அலுவலக நினைவுக்குறிப்புகளில் கருதப்பட்டுள்ளவாறு, ''தோற்றுவாயிலேயே தரகுத்தொகை அளிக்கும் முறை'', பி.பி.எஃப்.(PPF) முகவர்களுக்கு தரகுத்தொகை அளிக்கும் விஷயத்தில் கடைபிடிக்கப்படுகிறது. இதே முறை எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) கீழ் வைப்புத்தொகை திரட்டும் முகவர்களுக்கும் பொருந்தும். ஓய்வுபெறும் ஊழியர்களுக்கான ஏற்கனவே உள்ள வைப்புத்திட்டங்களின் கீழ் எஸ்.ஏ.எஸ்(SAS) முகவர்கள் வைப்புகள் திரட்டிக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

B. திட்டங்களின்கீழ் நடைபெறும் பல்வேறு பரிவர்த்தனைகளுக்கான கணக்கிடும் நடைமுறை பற்றிய விவரங்கள் இறுதிவடிவம் பெறும் நிலையில் உள்ளன இது தவிர திட்டங்களின் கீழ் நடைபெறும் பரிவர்த்தனைகளை கீழ்க்கண்டவாறு பிரித்திடலாம்.

**i. வைப்புகள் மற்றும் அசலைத்திரும்ப பெறுவது**

முக்கிய தலைப்பு : 8001 – தேசிய சேமிப்பு வைப்புகள் : 00.103 – நிரந்தர மற்றும் கால வைப்புகள்

**ii. வைப்புதாரர்களுக்கு வட்டி அளிப்பது**

முக்கிய தலைப்பு : 8008 – தேசிய சிறு சேமிப்பு நிதியின் வரவும் செலவும்: 02 – சந்தாதாரர்களுக்கு வட்டி பணம் செலுத்துதல் : 101 - தேசிய சேமிப்பு வைப்புகளுக்கு வட்டி

**iii. முகவர்களுக்கு அளிக்கப்படும் தரகுத் தொகை**

முக்கிய தலைப்பு : 8008 – தேசிய சிறு சேமிப்பு நிதியின் வரவும் செலவும்: 03 – நிர்வாக கட்டணம் 103 – முகவர்களுக்கு தரகுத்தொகை அளிப்பது : 02 வங்கிகளால் அளிக்கப்படும் தரகுத்தொகை : 01 – எஸ்.ஏ.எஸ். முகவர்களுக்கு அளிக்கப்படும் தரகுத்தொகை : 05 மற்ற கட்டணங்கள்

C. எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004ஐ நிறைவேற்றவதற்கான முறைமைகளை அதற்கென நியமிக்கப்பட்ட உங்களது கிளைகளுக்கு நன்கு தெரியப்படுத்துமாறு அறிவுறுத்துகிறோம். அதோடு அவர்களுக்குத் தேவையான எழுதும் பொருட்களையும் மற்றவைகளையும் கொடுத்துவிட வேண்டும். இந்திய அரசு 1.12.2004ற்குள் இத்திட்டத்தை பொதுத்துறை வங்கிகளின் மூலம் செயல்படுத்துவதில் ஆர்வமாக உள்ளதால் எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS)2004ஐ வெற்றிகரமாக தொடங்கி, தடங்கலற்ற செயல்பாட்டிற்கு உடனடி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு நாங்கள் உங்களுக்கு அறிவுறுத்துகிறோம்.

3. உங்களுக்கு தகவல் அறிவிப்பு மற்றும் தேவையான நடவடிக்கைக்காகவும் பொதுத்துறை வங்கிகள் கடைபிடிக்க வேண்டிய கணக்கிடும் நடைமுறை மற்றும் விவர அறிவிப்பு முறை பற்றிய விவரங்கள் அடங்கிய பின் சேர்க்கை Iஐ நாங்கள் இத்துடன் இணைக்கிறோம். உங்களுக்கு தகவல் அறிவிப்பு மற்றும் தேவையான நடவடிக்கைக்காகவும் எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004ன் முக்கிய சாராம்சங்கள் பின்சேர்க்கை IIல் கொடுக்கப்பட்டுள்ளது.

4. மேற்கண்ட விஷயத்தில் எங்களின் அறிவுறுத்தலுக்குட்ட உங்களின் மண்டல/பகுதி (Divisional) அதற்கான நியமிக்கப்பட்ட கிளை அலுவலகங்களுக்கு பொருத்தமான உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுமென அறிவுறுத்துகிறோம். உங்களுக்கு மேலும் அறிவுறுத்துவது என்னவென்றால் எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004ன்கீழ் வைப்புத்தொகைகளை அதற்கென நியமிக்கப்பட்ட கிளைகளில்,

2004ம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. தயவுசெய்து பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

நம்பிக்கையுள்ள

(பி.பி. சங்மா)
பொது மேலாளர்

**இணைப்பு ‘அ’**

**மூத்த குடிமக்களின் சேமிப்பு திட்டம் 2004**

**1. பங்கேற்கும் வங்கிகள்**

பி.பி.எஃப் (PPF) 1968 திட்டத்தைச் செயலாக்கம் செய்யும் பொதுத்துறை வங்கிகளின் நியமனம் செய்யப்பட்ட கிளைகளின் மூலமாக மேற்கண்ட திட்டத்தைச் செயலாக்கம் செய்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**2. நிதிகள் மாற்றத்திற்கான கணக்கிடும் மற்றும் அறிவிக்கும் முறைமைகள்**

பொதுத்துறை வங்கிகளின் கிளைகள் எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004ன்கீழ் பெறும் சந்தா தொகைகளை தின அடிப்படையில் நாக்பூரிலுள்ள அவர்களது இணைப்புப்பிரிவுக்கு அனுப்புகின்றன. இந்திய ரிசர்வ் வங்கி நாக்பூரில் (CAS) மத்திய கணக்குப் பிரிவில் உள்ள அரசுக் கணக்கிற்காக தற்போதுள்ள நடைமுறையின்படி செய்யப்படும். மேலும் இப்போதுள்ள நடைமுறையின்படி அரசுக் கணக்கின் வரவிற்கு சந்தா தொகையை வாங்கிய தேதியிலிருந்து 3 நாட்கள் கழித்து அனுப்பினால் பற்றுரிமைச் சீட்டு (Coupon Rate) விகிதத்தில் தண்டனை வட்டியை வரவழைக்கும்.

**B. முகைமை வங்கிகளால் கீழ்க்கண்ட அறிக்கை முறைமை கடைபிடிக்கப்படும்**

i. எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004 சம்பந்தமான பரிவர்த்தனைகளை கையாளும் பாரத ஸ்டேட் வங்கியின் நியமனம் செய்யப்பட்ட கிளைகள் நேரடியாகவோ அல்லது அவர்களுடைய ஒன்றிணைக்கப்பட்ட கிளைகள் மூலமாகவோ நவி மும்பை (Navi Mumbai) யில் உள்ள அவர்களது பொது நிர்வாக துறைக்கு அறிக்கை தாக்கல் செய்யலாம். நவி மும்பையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியின் பொது நிர்வாக துறை அவற்றை ஒருங்கிணைத்து கிளை வாரி மற்றும் மாநில வாரியான புள்ளி விவரங்களை, நிதிகளை தீர்வை செய்ய சி.ஏ.எஸ்.(CAS) நாக்பூருக்கு அனுப்புகின்றது. எஸ்.சி.எஸ்.எஸ். 2004 தொடர்வான பரிவர்த்தனைகளின் அறிக்கை பற்றிய இறுதி பதிவு வடிவத்தை எங்களுடைய மத்திய கணக்கு பிரிவு நாக்பூரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ii. எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004 ன்கீழ் வரும் பரிவர்த்தனைகளை பொதுத்துறை வங்கிகள் மற்றும் கூட்டாளி வங்கிகளின் இணைப்புப் பிரிவுகள் நேரடியாகவோ அல்லது அவர்களது ஒன்றிணைக்கப்பட்ட கிளைகள் மூலமாகவோ நாக்பூரில் உள்ள அவர்களது இணைப்புப் பிரிவிற்கு அறிக்கை தாக்கல் செய்யலாம்.

iii. எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004 பரிவர்த்தனைகளை, பொது துறை வங்கிகள் மற்றும் கூட்டாளி வங்கிகளின் இணைப்புப் பிரிவுகள் மாநில வாரி மற்றும் கிளை வாரியாக தினந்தோறும் அடிப்படையில் நாக்பூரில் உள்ள மத்திய கணக்குப் பிரிவிற்கு அனுப்பி, நிதிகளின் தீர்வையை, நாக்பூர் மத்திய கணக்குப்பிரிவிடம் நேரடியாக செய்து கொள்ளும். எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004 தொடர்பான பரிவர்த்தனைகளின் அறிக்கை பற்றிய இறுதி பதிவு வடிவத்தை நாக்பூரில் உள்ள எங்களது மத்திய கணக்குப் பிரிவிடமிருந்து பெறலாம்

iv. பாரத ஸ்டேட் வங்கியின் மாவட்ட அளவிலான ஒன்றிணைக்கப்பட்ட கிளைகள் பொதுத்துறை வங்கிகள் மற்றும் கூட்டாளி வங்கிகளின் அறிக்கைகளை பெற்றுக் கொள்ளாது. அதோடு எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004 தொடர்பான பரிவர்த்தனைகளுக்கு (பணம்) நிதிகளை தீர்வு செய்யாது.

v. அஹமதாபாத், பெங்களூர், புவனேஸ்வர், கொல்கத்தாம் கௌஹாத்தி, ஹைதராபாத், ஜெய்பூர், கான்பூர், சென்னை, மும்பை, நாக்பூர், புது தில்லி, பாட்னா மற்றும் திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலுள்ள ரிசர்வ் வங்கி அலுவலகங்கள், எஸ்.சி.எஸ்.எஸ் (SCSS) 2004 பரிவர்த்தனைகள் தொடர்பான அறிக்கைகளை பொதுத் துறை வங்கிகள் மற்றும் கூட்டாளி வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடாது.

**3.** முகைமை வங்கிகளின் நாக்பூரில் உள்ள இணைப்பு செல்கள் மற்றும் நவி மும்பையிலுள்ள பாரத ஸ்டேட் வங்கியின் பொது நிர்வாக துறை ஆகியவை, புதுதில்லியிலுள்ள மத்திய அரசின் நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரத் துறையின் முதன்மை கணக்கு அதிகாரியிடம் மாதாந்திர அறிக்கையாக சமர்பிக்க வேண்டும். எந்த மாதத்திற்கு அறிக்கை அனுப்பப்படுகிறதோ, அதைத் தொடர்ந்து வரும் மாதத்தின் முதல் வாரத்தில் அந்தத் துறைக்கு அறிக்கை அனுப்பப்பட வேண்டும்.

**<u>இணைப்பு 'ஆ'</u>**

## <u>மூத்த குடிமக்களின் சேமிப்பு திட்டம் 2004</u>

| | |
|---|---|
| **திட்டம் அமலில் உள்ள காலம் :** | 5 ஆண்டுகள்; அது மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படக் கூடும் |
| **வட்டி விகிதம்** | 9% ஆண்டு சதவீதம் |
| **வட்டி கணக்கிட இடைவெளி காலாண்டு வரி அம்சங்கள்** | வட்டி முழுமையான வரி விதிப்பிற்குரியது |
| **முதலீடு இருக்கவேண்டிய மடங்குகள்** | ரூ. 1000 |
| **அதிகபட்ச முதலீட்டு வரம்பு** | ரூ.15 லட்சம் |
| **தகுதிக்கான குறைந்தபட்ச வயது** | 60 வருடங்கள் (தானாக அல்லது சிறப்பு ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு 55 வயது) |
| **முதிர்வடைவதற்குமுன் திரும்ப பெறும் வசதி** | 1 வருடம் வைத்திருந்தபின் செய்யலாம். ஆனால் அபராதம் உண்டு |
| **மாற்றுரிமை அம்சம்** | இல்லை |
| **வணிகம் செய்யும் வசதி** | இல்லை |
| **நியமனம் செய்யும் வசதி** | உண்டு |
| **வைத்திருக்கும் விதம்** | பொதுவாக தனி என்றாலும் கூட்டாக வைத்திருக்கும் விதத்திற்கு அனுமதி உண்டு. ஆனால் பலனடைபவர்களுடன் கூட்டு சேர்ந்து வாழ்க்கைத் துணைவர்கள் மட்டுமே கணக்குகளை ஆரம்பித்திட அனுமதிக்கப்படுவர் |
| **விண்ணப்பங்கள் கிடைக்கும் வசதி** | பொதுத்துறை வங்கிகளின் அதற்கென நியமிக்கப்பட்ட கிளைகள் மற்றும் தபால் அலுவலகங்கள் மூலமாக |